(இ) காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் பேரவை (Senate)க்கு உறுப்பினர் தேர்வு.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்:

திரு. பா. மனோகரன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப் பெற்று நிறைபெற்றது.

6. மானியக் கோரிக்கைகள் 1989-90—விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்ச்சி:

(அ) கோரிக்கை எண் 7.—மாநிலச் சட்டமன்றம்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

மானியக் கோரிக்கை எண் 7, மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,01,56,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சட்டமன்ற ஊழியர்களை பல ஆண்டு காலமாக தற்காலிகமாக வைத்திருப்பதை மாற்றி நிரந்தரமாக்கவும், அவர்களது ஊதியத்தை உயர்த்தவும் ஏற்பாடு செய்வது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

மானியக் கோரிக்கை எண் 7— மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,01,56,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.